# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 11 செவ்வாய்க்கிழமை 27.08.2024 கதிர் 344











# கிளிநொச்சியில் பிரசாரத்தை ஆரம்பித்த பொது வேட்பாளர்

## பளையில் பாரம்பரிய முறையில் மக்கள் உணர்வுபூர்வ வரவேற்பு

தமிழ் பொதுக்கட்டமைப்பு சார்பாக சுயேட்சையாக போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர் பா. அரியநேந்திரன் கிளிநொச்சி மாவட்டத்திற்கான தனது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இன்று காலை ஆரம்பித்தார்.

இன்று காலை பளை நகருக்கு வருகை தந்த வேட்பாளருக்கு தமிழ் பாரம்பரிய பறை மற்றும் மங்கள வாத்திய இசையோடு அவர் வரவேற்கப்பட்டார். பெருந்திரளான மக்கள் கூடிநின்று அவரை உற்சாகமாக வரவேற்றனர். 2➤

# 700 உள்ளூராட்சி சபைத் தேர்தல் வேட்பாளர்கள் நாட்டில் இல்லை

## 20 பேர் உயிருடன் இல்லை

உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்த சுமார் 700 வேட்பாளர்கள் பொருளாதார பிரச்சினை காரணமாக வெளிநாடு சென்றுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மேலும், கிட்டத்தட்ட இருபது வேட்பாளர்கள் இறந்துவிட்டதாக தெரிவிக்கபடுகிறது.

இது தவிர, பல்வேறு காரணங்களால் கிட்டத்தட்ட ஐநூறு வேட்பாளர்கள் கட்சி மாறியுள்ளதாக தேர்தல் அதிகாரிகளுக்கு தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்கவிடம் வினவியபோது, உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்புமனு தாக்கல் செய்தவர்களின் விபரங்களை கண்டறியும் விசேட நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் பின்னர், வேட்பாளர்கள் தொடர்பில் அவ்வாறான விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கு மாவட்டச் செயலகங்கள் மற்றும் அந்தந்த அரசியல் கட்சிகளின் ஆதரவைப் பெறலாம் என தேர்தல் ஆணைக்குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த நிலைமைகள் காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான 8,711 வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வேட்புமனுக்கள் கோரப்பட்டன, அதில் 80,672 வேட்பாளர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

# நாமலின் விஞ்ஞாபனம் அடுத்த வாரம் வெளிவரும்



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

கொள்கைப் பிரகடனத்தை தயாரிக்கும் இறுதிப் பணிகள் இந்த நாட்களில் இடம்பெற்று வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சமுர்த்தி இயக்கத்தை பலப்படுத்தி அதனை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா 2➤

# பொருளாதாரப் பிரச்சினையை மட்டும்தான் காட்டுகின்றார்கள்

## சுரேஸ் பிரேமச்சந்திரன்



“பல சிங்கள வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்கின்றோம். தற்போது தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையை மறந்து பொருளாதார பிரச்சனையை மாத்திரம் காட்ட அவர்கள் முனைகின்றனர்” என்று ஈபிஆர்எல்எப் அமைப்பில் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழ்ப்பொது வேட்பாளருக்கு பல்லை பகுதியில் இன்று காலை அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை தெரிவித்தார்

“தமிழ் மக்களுக்கு சாதகமான அரசியல் தீர்வை வலியுறுத்தி வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் வடக்கு கிழக்கு இணைப்பின 2➤

# கச்சத்தீவுக்கு அருகில் படகு கவிழ்ந்து விபத்து

## இரு இந்திய மீனவரை காணவில்லை

கச்சத்தீவுக்கு அருகில் இந்திய மீனவர்கள் பயணித்த படகு ஒன்று விபததிற்குள்ளாகியுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

படகுவிபத்துக்குஉள்ளாகும் சந்தர்ப்பத்தில் 4 மீனவர்கள் இருந்துள்ளதாகவும் அதில் இருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளதாகவும் இலங்கை கடற்படை மேலும் கூறியுள்ளது.

மற்றைய இரண்டு மீனவர்களும் பாதுகாப்பாக நீந்தி கச்சத்தீவில் கரை சேர்ந்துள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# விசேட தேவை உடையவர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் செய்தி

ஜனாதிபதித் தேர்தலில் பார்வைக் குறைப்பாடு அல்லது உடல் ஊனமுற்ற வாக்காளர் பிரிதொரு உதவியாளருடன் வாக்களிக்க வருவதற்கு சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி குறித்த உதவியாளருக்கு சில நிபத்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

அவற்றில், குறித்த உதவியாளர் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் என்றும் தேர்தலில் போட்டியிடக் கூடாது என்றும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், ஒரு குறிப்பிட்ட வேட்பாளரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி பிராந்திய பிரதிநிதியாகவோ அல்லது வாக்குச் சாவடி பிரதிநிதியாகப் பணியாற்றாத நபராக இருக்க வேண்டும்.

மேலும், உதவியாளர் எந்தவித ஊனமும் இல்லாதவராக இருக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

மேற்படி உடற்தகுதிச் சான்றிதழைப் பெறுவதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை மாவட்ட தேர்தல் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம் அல்லது றறற.நடநஉவைழளெ.பழஎ.டம இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வைக் குறைபாடு அல்லது வேறு ஏதேனும் உடல் ஊனமுற்றோர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூர்த்தி செய்து கிராம அலுவலரிடம் சமர்ப்பித்து சான்றிதழைப் பெற வேண்டும்.

அதன் பிறகு அரச மருத்துவ அலுவலரிடம் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டு வாக்காளரின் உடல் தகுதி பதிவு செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகிறது.

மேலும், பார்வையற்றோர் அல்லது வேறு ஏதேனும் உடல் ஊனமுற்ற வாக்காளர்கள் உரிய உடற்தகுதி சான்றிதழை வாக்குச்சாவடிக்கு கொண்டு வர வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புள்ளியாகவே பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளார்.

கொழும்பு மற்றும் இராஜந்திரிகளுக்கு தமிழ்த்தேசிய பிரச்சனை உள்ளது என்பதை சொல்வற்காகவும், யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகின்றது.

இனப் பிரச்சனையை தீர்க்க தவறினால் பொருளாதார மிக மோசமான நாடாக மாறும். இனப் பிரச்சனையை தீர்க்காதன் காரணமாகவே பொருளாதார பிரச்சனை தீவிரமடைந்தது என்பதை இவர்கள் மறந்துவிடக்கூடாது" என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். 113

## நாமலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

## கிளிநொச்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனைத் தொடர்ந்து பளை பேருந்து நிலையத்தில் பிரசார நடவடிக்கையை அவர் ஆரம்பித்திருந்தார். அங்கிருந்து இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளிநொச்சி நகர் சென்று இரணைமடு சந்தியில் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

பளையில் நடைபெற்ற பிரசாரத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இங்கு கூடியிருந்த மமக்கள் மத்தியில் உரையாற்றிய அரியநேத்திரன், "1948 ம் ஆண்டு இலங்கை சுகந்திரம் அடைந்ததற்கு பின்பு உரிமையை வலியுறுத்தி அகிம்சையிலும் ஆயுத வழியிலும் போராடினோம். 2009 யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்பு இராஜந்திர ரீதியில் போராடுகின்றோம்" என்று தெரிவித்தார்.

"நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் 8 பேர் வந்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆக இனப்பிரச்சனை தொடர்பாக பேசியிருக்கின்றோம். தீர்வு இல்லை. பேச்சு வார்த்தைகளின் போது ஏமாற்றப்பட்டோம். ஏமாற்றப்பட்டதன் வெளிப்பாடே இந்த முடிவு.

இனத்தின் வெளிப்பாடாகவே இந்த தேர்தல் அமைகிறது. தமிழ் இனத்திற்காக பல்வேறு பொங்கு தமிழ், எழுக தமிழ், பொலிகண்டி முதல் பொத்துவில் வரை என பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தேர்தலின் முடிவு இனத்தின் முடிவாக இருக்க வேண்டும்" என்றும் அரியநேத்திரன் தெரிவித்தார்.



## தேசிய கடற்கரை கபடி அணிக்கு நிந்தவூரிலிருந்து இருவர் தெரிவு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இவ்வாண்டு ஈரானில் இடம்பெறவுள்ள முதலாவது ஆண்களுக்கான உலக கிண்ண போட்டியில் கலந்து கொள்ளும் வகையில் இலங்கையின் தேசிய கடற்கரை கபடி அணிக்கு அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் பிரதேசத்திலிருந்து இரு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படை கபடி அணியைச் சேர்ந்த எ.ஜே.எம் ரிஸ்னி மற்றும்

ஏ.ஆர் ஜ/மான் ஆகியோரே இவ்வாறு இலங்கை தேசிய கடற்கரை கபடி அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் ஆகும்.

இவ் இருவரும் நிந்தவூர் மதீனா விளையாட்டுக்கழகத்தின் வீரர்கள் என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## முன்னாள் அமைச்சர் பௌசிக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசிக்கு 10 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு சொந்தமான வாகனத்தை முறைகேடாக பயன்படுத்திய சம்பவம் தொடர்பில் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அருக்கு இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவருக்கு 400,000 ரூபா அபராதமும் விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தலைமன்னார் கடலில் நேற்று 8 இந்திய மீனவர்கள் சிக்கினர்

### செப்டெம்பர் 5 வரை விளக்கமறியல்

இலங்கைக் கடற்பரப்பினுள் சட்டவிரோதமாக நுழைந்து மீன்பிடித்த நிலையில் தலைமன்னாரில் கைதுசெய்யப்பட்ட தமிழகம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டது.

இலங்கைக் கடற்பரப்பினுள் நேற்று இரவு சட்டவிரோதமாக ஒரு விசைப் படகில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் மேற்படி 8 மீனவர்களையும் கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் கடற்படையிடரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் கடற்படையினர், அந்த மீனவர்களிடம் முன்னெடுத்த விசாரணைகளைத் தொடர்ந்து இன்று பகல் மேலதிக நடவடிக்கைகளுக்காக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று மதியம் மன்னார் நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை முன்னெடுத்த மன்னார் நீதிவான் மேற்படி 8 மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ரணிலின் அரசியல் ஆயுட்காலமும் செப்ரம்பர் 21 இல் முடிவுக்கு வரும்

## சர்வஜன சக்தியின் பிரசாரத்தில் விமல் வீரவன்ச



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் ஆயுட்காலம் செப்டெம்பர் 21 ஆம் திகதியுடன் நிறைவடையும் என்று தெரிவித்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, "தேசியத்தை கருத்திற் கொள்பவர்கள் எம்முடன் கைகோர்க்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

அநுராதபுரம் நகரில் இடம்பெற்ற சர்வஜன சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே விமல் வீரசன்ச இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய விமல் வீரவன்ச, "ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு எதிராக செயற்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாட்டுக்காக அரசாங்கத்தில் இருந்து வெளியேறி எதிர்க்கட்சியாக செயற்பட்டோம்" என்றும், "எமக்கும் சுயநல நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட முடியும். ஆனால் ஒருபோதும் நாங்கள் அவ்வாறு செயற்படவில்லை" என்று தெரிவித்தார்.

"2019 ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணையை பலவீனப்படுத்தக் கூடாது என்பதற்காகவே 7 அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து சர்வஜன சக்தி என்ற புதிய அரசியல் பரிணாமத்தை தோற்றுவித்துள்ளோம்" என்று தெரிவித்த விமல் வீரவன்ச, "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் ஆயுட்காலம் எதிர்வரும் மாதம் 21 ஆம் திகதியுடன் நிறைவடையும், அவருக்கு ஆதரவு வழங்க சென்றுள்ளவர்களின் அரசியல் எதிர்காலமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது" என்றும் குறிப்பிட்டார்.

# கிளிநொச்சியில் இன்று கோர விபத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர் பலி

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ-09 வீதி பாரதிபுரம் பகுதியில் இன்று செவ்வாய்கிழமை காலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த லொறியொன்று பேருந்து ஒன்றை முந்திச் செல்லமுற்பட்ட போது மோட்டார் சைக்கிளில் வந்தவர் லொறி சில்லுக்குள் நசியுண்டு உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (113)






# டயனாவை பிணையில் விடுவிக்க உத்தரவு



முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை பிணையில் விடுவிக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரட்டைக் குடியுரிமை தொடர்பான 03 குற்றச்சாட்டுகள் தொடர்பாக கமகேவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, 25,000 ரூபா மற்றும் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகள் விதிக்கப்பட்டுள்ளது

நீதிமன்ற உத்தரவுக்கு பதிலளிக்கும் வகையில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே தனது சட்டத்தரணியுடன் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார்.



# தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி பிரசாரப் பயணத்தை ஆரம்பித்த அரியம்

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பொலிகண்டியில் இருந்து பொத்துவில் வரையாக தமிழ்ப் பொதுவேட்பாளரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தேர்தல் பிரச்சார பயணத்தின் ஒரு கட்டமாக இன்றையதினம் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபன் நினைவுத் தூபியில் இருக்கும் திலீபனின் திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தியிருத்தார்.

இவ் அஞ்சலி நிகழ்வில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி பிரச்சாரப் பயணத்தை ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# செப்டம்பர் 21 இலங்கை இளைஞர் சமூகத்திற்கான விடிவு நாளாகும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இளைஞர்களை ஒரு போதும் புறக்கணித்து செயற்பட்டதில்லை, இளைஞர்கள் தொடர்பில் அவரது கனவு மிகப் பெரியது"

முடியும் ஸ்ரீலங்கா எனும் தொனிப்பொருளில் அட்டாளைச்சேனை லொயிட்ஸ் மண்டபத்தில் (25)இடம்பெற்ற இளம் தொழில் முனைவோருடனான கலந்துரையாடல் நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொத்துவில் தொகுதி பிரதம அமைப்பாளர் யூ.கே. ஆதம்லெப்பை அவர்கள் மேற்கொண்டவாறு உரையாற்றினார்.

சீரழிந்து சின்னாபின்னமான எமது நாட்டை மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய நிலைக்கு மிகவும் குறுகிய காலத்தில் சீர் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களை மீண்டும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக அமர்த்த வேண்டிய பொறுப்பு இளம் தொழில் முனைவோரின் கைகளில் தங்கியுள்ளது என்று தெரிவித்தார்.

# அம்பாறை முன்னாள் எம்.பி. ரணிலை ஆதரிக்க முடிவு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான விமலவீர திசாநாயக்க நடைபெறவுள்ள ஜனாதிபதியாக தேர்தலில் சுயேட்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார்.

கொழும்பு பிளவர் வீதியிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.



# யூத் விஷன் 2048 இளைஞர் அமைப்பு ரணிலின் கரத்தை பலப்படுத்த உறுதி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

யூத் விஷன் 2048 இளைஞர் அமைப்பு ஒழுங்கு செய்திருந்த இளைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு பத்தரமுல்ல வோட்டர் எஜ் உல்லாச விடுதியில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் தேசிய அமைப்பாளர் சாகல ரத்நாயக பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில் பங்கேற்ற இளைஞர் யுவதிகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க அவர்களின் கரங்களை பலப்படுத்த உறுதி பூண்டனர்.

# சஜித்துக்கு ஆதரவாக சம்பாந்துறையில் நேற்றிரவு மாபெரும் பிரசாரக் கூட்டம்



(அஸ்ஹர் ஆதம்)

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரரித்து தேர்தல் பிரச்சாரக்கூட்டமொன்று நேற்று இரவு சம்மாந்துறையில் இடம் பெற்றது.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரஊப் ஹக்கீம் அகில இலஙகை மக்கள் காங்கிரஸின் தலைவர் றிஷாத் பதியுதீன் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜீபுர் ரஹ்மான், எச்.எம்.எம்.ஹரீஸ், பைஸால் காசிம், முன்னாள் இரானுவத்தளபதி மகேஷ் சேனநாயக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.எம்.மன்சூர் உட்பட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகில இலஙகை மக்கள் காங்கிரஸ் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டதோடு இதில் பெரும் திரளனான பொது மக்களும் கலந்து கொண்டனர்



# சஜித் பிரேமதாச வருகைக்கான ஏற்பாட்டுக் குழு விசேட கூட்டம்

( வி.ரி.சகாதேவராஜா)

ஜனாதிபதி வேட்பாளரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாசாவை ஆதரித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள பொதுக்கூட்டம் தொடர்பான முன்னேற்பாடு கூட்டம் ஐக்கிய மக்கள் கட்சியின் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.கணேசமூர்த்தி தலைமையில் கல்லடியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிஷாட் பதியுதீன் முன்னாள் அமைச்சர் தவிசாளர்அமீரலி மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

இணைந்த கட்சிகளின் உடன்படிக்கை அதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உடன்படிக்கை தொடர்பாகவும் பேசப்பட்டது.

# நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி

# கண்காட்சி நல்லூரில் ஆரம்பம்








யாழ் பல்கலைக்கழகத்தின் வடமாகாண நீர் பாதுகாப்பு செயற்றிட்டமும் (WASPAR), இளைய நீர்த்துறையாளர் வட்டம் (YWP) ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடமாகாண நீர்ப்பாசன திணைக்களம், நீர்வளச் சபை உள்ளிட்ட பல்வேறு நீர் சார்ந்த அரச திணைக்களங்களும், அமைப்புகளும் இணைந்து பங்கேற்ற “நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி” என்கிற தொனிப்பொருளிலான கண்காட்சி யாழ்ப்பாணம் நல்லூரில் ஆரம்பமானது.

நல்லூர் பெருந்திருவிழாவை ஒட்டி மக்களுக்கு நீர் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லூர் முன்பாகவுள்ள யாழ். மாநகரசபையின் தீயணைப்பு படை வளாகத்தில் ஆரம்பமான இக்கண்காட்சியில் வடக்கு பிரதம செயலாளர் எஸ். இளங்கோவன், றுயுளீயுசு செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் எஸ். சிறீஸ்கந்தராஜா மற்றும் நீர்ப்பாசன பொறியியலாளர்கள், பொதுமக்கள், நீர் ஆர்வலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

செவ்ரெட்பர் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள குறித்த கண்காட்சியில் நீர் சார்ந்த ஆய்வு விபரங்கள், விஞ்ஞான விளக்கங்கள், கலந்துரையாடல்கள், விளையாட்டுகள், இளையோர்கள் - சிறார்களுக்கான பரிசுப் போட்டிகள் என பலவகையான நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வரைமுறையின்றி அதிகமாக குழாய் கிணறுகளை அமைப்பதன் மூலம் நன்னீர் உவர் நீராக மாற்றப்படும் அபாயம் தொடர்பிலும், வடக்கிற்கான ஆறு தொடர்பிலான விளக்கங்களும், நீரில் என்னென்ன பரிசோதனைகளை மேற்கொள்வதன் மூலமாக நீரில் உள்ள பிரச்சினைகள் தொடர்பில் அறிந்து கொள்ளவும் இக்கண்காட்சி உறுதுணையாக இருப்பதாக கண்காட்சியை பார்வையிட்ட பொதுமக்கள் கருத்து தெரிவித்திருந்தனர். நல்லூர் திருவிழாவுக்கு வரும் பொதுமக்கள் வடமாகாண நிலத்தடி நீர்வளத்தின்பால் கவனம் செலுத்தி குறித்த கண்காட்சியை பார்வையிட்டு நீர் சார்ந்த மேலும் பல்வேறு தகவல்களை அறிந்து கொள்ளுமாறும் இதன் ஏற்பாட்டாளர்கள் வேண்டிக் கொண்டுள்ளனர்.

நன்றி கிரிஷாந் செல்வநாயகம்

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!

வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# சுகாதார பரிசோதகருக்கு மக்கள் அஞ்சலி





அவித்தாவ ஒலகந்த எத்தாவெட்டுனுவல பகுதியில் நீராட சென்ற பொது சுகாதார பரிசோதகர் சிவயோகபதி கௌதமனின் பூதவுடன் இறுதி கிரியைகளுக்காக அச்சுவேலி பத்தமேனியிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது.

நீரில் மூழ்கி உயிரிழந்துள்ள குறித்த இளைஞன் மொரட்டுவ பிரதேசத்தில் பொது சுகாதார பரிசோதராக கடந்த ஐந்து வருடங்களாக கடமையாற்றியுள்ளார்.

டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் குழுவினர் மற்றும் நான்கு பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவொன்று குளத்தில் நீராடச் சென்ற போதே இவ்வனர்த்தத்தில் சிக்கியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மொரட்டுவை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் கடமையாற்றிய எஸ்.கௌதம் (வயது -26) மற்றும் எஸ். ஹர்ஷநாத் (வயது -28) ஆகிய இரு பொது சுகாதார உத்தியோகத்தர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இவர்களில் எஸ். ஹர்ஷநாத் (வயது -28) மட்டக்களப்பை சொந்த இடமாகக் கொண்டவர். எஸ்.கௌதம் அச்சுவேலி பத்தமேனியை சேர்ந்தவர்.

அச்சுவேலி இளைஞனின் பூதவுடல் இன்று மதியம் ஒரு மணியளவில் பத்த மேனி தீத்தாங்குளம் இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படவிருந்தது.







# தங்கத்திரவம் ஆவணப்படம் திரையிடல்




யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்சினையை பேசுபொருளாகக் கொண்டு எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட தங்கத்திரவம்' என்னும் தலைப்பிலான ஆவணப்படம் எதிர்வரும் (29.08.2024) வியாழக்கிழமை , முற்பகல் 10 மணிக்கு, விசுவமடு – திறன்விருத்தி நிலையத்தில் திரையிடப்படவுள்ளது.

உள்ளூர் நீர் மூலங்களின் முக்கியத்துவம், அவற்றிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், அவற்றைப் பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள கடப்பாடு என்பவற்றை ஆவணப்படத்தினூடாக சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் இந்தத் திரையிடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# ஏறாவூர் அமைப்பாளராக எம்.எஸ். நழீம் நியமனம்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏறாவூர் பிரதேச அமைப்பாளராகஏறாவூர்நகர சபையின் முன்னாள் தவிசாளரான பொறியியலாளர் எம்.எஸ். நழீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக் இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார். உடன் செயற்படும் வகையில் இந்நியமனம் வழங்கப்படுவதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவராகவும் ஏறாவூர் பிரதேச அமைப்பாளராகவும்பதவி வகித்த அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா கட்சியின் தீர்மானத்தை மீறி ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதால் அவர் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பதை அடுத்தே கட்சியின் ஏறாவூர் பிரதேச அமைப்பாளராக பொறியியலாளர் எம்.எஸ். நழீம் நியமிக்கப்பட்டுள்ளார்.




## தங்க வர்ண பதக்கம் வென்ற கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய மாணவி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சுற்றாடல் அமைச்சின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் "சுற்றாடல் முன்னோடிகளுக்கான தேசிய பாசறை – 2024" கொழும்பு, மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் கடந்த 03 நாட்களாக நடைபெற்றது.

இத் தேசியப் பாசறையில் கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய சுற்றாடல் கழக மாணவியும் தங்க வர்ணப் பதக்க பரீட்சிப்பில் சித்தியடைந்த மாணவிகளுள் ஒருவருமான பீ.எம்.எப்.நுஹா கலந்து கொண்டு தங்க வர்ணப் பதக்கத்தினையும் சான்றிதழையும் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

இம் மாணவியை பாராட்டி கௌரவிக்கும் விசேட காலை ஆராதனைக்கூட்டம் பாடசாலை அதிபர் எம்.ஐ.அப்துல் ரஸாக் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர் கலந்து கொண்டனர்.

## காரியப்பர் வித்தியாலத்திற்கு இரு கணினிகள் அன்பளிப்பு

(எம்.எஸ்.எம். ஸாகிர்)

சாய்ந்தமருது எம்.எஸ். காரியப்பர் வித்தியாலயத்திற்கு கல்முனை Shinning Stars அமைப்பினால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்காக 2 கணினிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

கணனிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு அதிபர் எம்.எஸ்.எம். ஆரிப் தலைமையில் நேற்று திங்கட்கிழமை காலை ஆராதனையின் போது இடம்பெற்றது.

இந் நிகழ்வில், Shinning Stars அமைப்பின் சார்பாக அதன் ஸ்தாபகத் தலைவி திருமதி பஸீரா றியாஸ் மற்றும் அதன் உறுப்பினர்களான திருமதி றிஸ்னா சுபைர் மற்றும் திருமதி பெரோஷா காரியப்பர் ஆகியோர் கலந்து கொண்டு கணனிகளை வழங்கி வைத்தனர்.

சிறுவர்களுக்கான கல்வி, பெண்கள் அபிவிருத்தித் திட்டம், ஜனாஸா நல்லடக்கத்தில் உதவி போன்றவற்றில் தங்களது பங்களிப்பை வழங்குவது குறித்த அமைப்பின் மிக முக்கிய சேவைகளாக இருந்து வருகிறது.

அத்துடன் ஏனைய பல சேவைகளையும் Shinning Stars அமைப்பு செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD
PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக
உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை
பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க
ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver
செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து
உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD
DRIVER APP:
Google Play
App Store
jride
JRide Driver: Drive & Deliver
JRide - Beyond the Road
YOU CAN
EASILY
REGISTER
& ADD YOUR
VEHICLE
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே
புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து
வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp
மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!